13

அவள் சொன்னது

அம்மாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது. கடிதத்தைப் பார்த்தவுடன்தான் அம்மாவுடன் பேசி வெகு நாட்களாகி விட்டன என்று அனுவுக்கு ஞாபகம் வந்தது. தொலைபேசியில் பேசும் பத்து நிமிஷப் பேச்சில் மனத்தில் இருப்பதையெல்லாம் பேச முடியாது என்பாள் அம்மா. இவளும் இவள் தோழிகளும் தோழர்களும் நியூயார்க்கிலிருந்து அலாஸ்க்காவுக்கும் கலிஃபோர்னியாவுக்கும் பாஸ்டனுக்கும் சிகாகோவுக்கும் மணிக்கணக்கில் பேசுவதும் அதற்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் அம்மாவுக்குப் புரியாது. இவளுடன் பேசும்போது அம்மா கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பேசுவாள், இவள் டாலரில் கட்டணம் செலுத்தினாலும், ''நீ செலவழிச்சா என்ன, அது பணமில்லையா?'' என்பாள்.

தமிழில் கடிதம் படிப்பது பூர்வ ஜென்மத்தை நினைவூட்டிற்று. ''நீ டெலிபோனில் பேசி ரொம்ப நாள் ஆகிவிட்டது. உடம்பு சரியில்லையா, இல்லை டான்ஸ் டூர் போயிருந்தியா? நான் இரண்டு தடவை போன் செய்தேன். மணி அடித்தக் கொண்டே இருந்தது. பதில் சொல்லும் கருவியை இணைத்திருப்பாயே, அதுவும் இல்லை. உன்னிடமிருந்து போன் வந்து நாளாயிற்று என்று நளினியும் சொன்னாள். உடம்புக்கு ஒன்றுமில்லாமல் சௌக்கியமாக இருக்கிறாயா? அங்கே இந்த வருஷம் குளிர் ரொம்ப அதிகமாமே?

இந்தியாவுக்கு வரும் உத்தேசமிருக்கிறதா? இங்கே பாட்டிக்கு உடம்பு சரியில்லை ஆஸ்பத்திரியில் சேர்க்கும்படியாக இல்லை என்றாலும், நடமாட சிரமப்படுவதால் நானே அவளைக் குளிப்பாட்டி, கக்கூசுக்கு அழைச்சுச் சென்ற புடவை உடுத்தி எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. வயிற்றில் பிறந்த பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்பதால் உன் அப்பாவை இதையெல்லாம் செய்ய பாட்டி அனுமதிப்பதில்லை. இதில் ஆசாரம் வேறு. கண்கொத்திப் பாம்பாய் பார்த்துக் கொண்டிருக்கிறாள். என்னுடைய நிலைமை எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார். எனக்கும் வயது அறுபத்திரெண்டு ஆகிறது.''

அம்மா அவளிடம் உதவி கோரவில்லை. குற்றம் சாட்டவில்லை. ஏனென்றால் இரண்டிற்கும் எப்படியும் எந்த அர்த்தமும் இருக்கப் போவதில்லை. அம்மாவுக்குத் தேவை ஓய்வு. பாத்திரம் தேய்ப்பதிலிருந்து, சமையல் செய்வதிலிருந்து ஓய்வு. அது பாட்டி உயிருடன் இருக்கும் வரை முடியாது. கைக்கு ஒரு ஆள் காலுக்கு ஒரு ஆள் போட்டுக் கொள்ளக் கூடிய வசதி இருந்தும் முடியாது. பாட்டியின் சமையலை கொல்லைக் கிணற்றிலிருந்து நீர் எடுத்து சமைக்கும் யோக்கியதை, கல்யாணமாகி வீட்டிற்குள் நுழைந்ததும் தோள்களில் சங்கு சக்கர சூடு இழுத்துக் கொண்ட அம்மாவுக்குத்தான் உண்டு, அல்லது ஒரு ஸ்ரீ வைஷ்ணவ பிராமணனுக்கு உண்டு.

அம்மா சென்றமுறை ஸ்ரீரங்கத்துக்குப் போனபோது அக்கம் பக்கத்து கிராமத்திலெல்லாம் ஆளுக்குச் சொல்லி விட்டு வந்தாளாம். யாரும் வரத் தயாராயில்லை என்கிறாள். கிணற்றில் இருந்து நீர் இழுக்க மாட்டார்களாம். துணி துவைக்க போன வருஷத்திலிருந்து அம்மா ஒரு மெஷினை வாங்கிப் போட்டிருக்கிறாள். வீடு கூட்டிப் பெருக்கும் வேலைக்காரிக்கு சமையலறைக்குள் எட்டிப் பார்க்கக் கூட உரிமையில்லை. இதை ஒரு கௌரவப் பிரச்னையாகக் கருதி பல வேலைக்காரிகள் வேலைக்கு முழுக்குப் போட்டிருக்கிறார்கள். குளித்து விட்டு மடித்துண்டு உடுத்தி அம்மா குளியல் அறையிலிருந்து

வெளியே வரும்போது அவளுடைய சிவந்த புஜங்களில் தென்படும் கன்னிக் கறுத்த வடுக்கள் அனுவுக்கு நினைவுக்கு வந்தது. கடிதத்தின் மீது மீண்டும் பார்வையை ஓட்டினாள். 'கண்கொத்திப் பாம்பாய் பார்க்கிறாள்.' அதாவது விழுப்புப் பட்டுவிடுமோ என்று. 'பாவம்' என்றாள் அனு வாய்விட்டு. அது அம்மாவுக்கா பாட்டிக்கா என்று புரியவில்லை. இருவருமே பாவப்பட்ட ஜன்மங்கள் என்று தோன்றிற்று. பாட்டியின் அம்மாவும், பாட்டி அவளது ஒரே பெண் என்பதால் அவர்கள் வீட்டிலேயே இருந்தாள். பதினைந்து வயதில் விதவை ஆனாளாம். அன்றிலிருந்தே அதி பயங்கர ஆசாரம் என்பாள் பாட்டி. அதை ஒருவிதப் பெருமையுடன் சொல்வாள். 45 வயதில் விதவையானதும் பாட்டியும் அந்த வட்டத்துள் சேர்ந்தாள். மேல படாதே, இங்க நிக்காதே, அது மேல சாயாதே என்று சதா தங்களைச் சுற்றி ஒரு வேலியைப் படரவிட்டு அதிலேயே தங்களுக்கு முக்கியத்துவத்தைத் தேடிக் கொள்ளப் பார்த்தாலும், இருவரும் தங்களது அன்பினால் வீட்டையே வளைத்துக் கொண்டது போல் இருக்கும். அதற்காகவே பிறவி எடுத்தது போல் இருக்கும்.

யாருடைய ஸ்பரிசமும் மேலே படாவிட்டால் நெருக்கம் எப்படி ஏற்படும் என்று அனுவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. ஆனால் கொள்ளுப்பாட்டி கடைசி மூச்சு விடும்போது 'கோபாலி (அதாவது அனுவின் அப்பா) சாப்பிடலியா இன்னும்' என்ற கேள்வியைத்தான் கேட்டு விட்டு செத்தாள். அப்பா அதைப் பற்றி வெகு நாட்களுக்குச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார்.

'பாவம்' என்றாள் அனு மறுபடி. கடிதத்தை மடித்து டிராயருக்குள் வைக்கும்போது சங்கிலி கோர்த்த மாதிரி ஓடிய தமிழ் வார்த்தைகள் ஜனன ஞாபகங்களை உசுப்பி விட்டது போல இருந்தது. அவள் இருக்கும் அந்த அறையும் ஜன்னலை மூடிய திரையைச் சற்று விலக்கினால் வெளியே தெரியும் வெண்பனிக் குவியலும் அந்த வரிகளிலிருந்து பல யுகங்களுக்கு அப்பால் நகர்த்திச் சென்று விட்டதைப் போல இருந்தது. சிகாகோ பல்கலைக்கழக வாசக

சாலையில் அமர்ந்தபடி ஏ.கே. ராமானுஜனின் குறுந்தொகை - அகம் - கவிதையின் ஆங்கில மொழி ஆக்கத்தைப் படிக்கிற மாதிரி. அவள் சொன்னது; அவன் சொன்னது; அவர்கள் சொன்னது - ''குறிஞ்சியும் முல்லையும் மருதமும் கற்பனையில் விரிந்து ஸ்பரிசம், காதல் என்ற ஆதார உணர்வுகளுக்கு 2000 வருஷங்கள் என்பது வெறும் சரித்திர அளவுகோல்'' என்று புரிகிற மாதிரி. ஆனால் சங்ககாலத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. பாட்டியையும் அம்மாவையும்தான் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுக்காக அனுதாபம்கூட பட முடியவில்லை.

''போன் செய்யணும்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். இப்பொழுது அங்கு இரவு நேரம். ராத்திரி எட்டு மணிக்கு செய்தால் அங்கு காலை எட்டு ஒன்பது மணி. அம்மா குளித்து விட்டுத் திருவாய் மொழி சொல்லிக் கொண்டே காய்கறி திருத்திக் கொண்டிருப்பாள். அப்பா அடுக்களையின் வாயிலில் ஈசிசேரில் அமர்ந்து பேப்பரைப் படித்தபடியே ஜெ.பின் ஹவாலா மோசடியை விவரித்துக் கொண்டிருப்பார். ஞாபகமாகச் செய்ய வேண்டும். அம்மாவுக்கு அனுதாபம் தேவை. ''ருக்கு, அனு பேசறா'' என்று அப்பா குரல் கொடுத்ததுமே அம்மாவுக்குத் தொண்டை அடைக்கும். ''ஏண்டி அனு, போனே பண்ணல்லே. எங்களையெல்லாம் மறந்துட்டியா?'' என்னும் போது கடைசி வார்த்தை கண்ணீரில் அமுங்கிப் போகும்.

இந்த மாதிரி தன்னுடைய வார்த்தைகள் கண்ணீரில் அமுங்கிப் போகுமோ என்பதற்காகவே அவள் இரண்டு மாதங்களாக போன் செய்யவில்லை என்று அம்மாவிடம் சொல்ல முடியாது. இரண்டு கண்டங்கள், மூன்று மகா சமுத்திரங்களுக்கப்பால் இருக்கும் மகள் போனில் அழுதால் நடுங்கிப் போவார்கள். மாமியார், அவளது மடி ஆசாரத்துக்கு ஈடுகொடுப்பது, முழங்கால் மூட்டுவலி போன்ற பிரச்னைகளையே சந்திக்கும் அம்மாவுக்குக் கல்யாணமாகாத தனது பெண் நியூயார்க்கில் பனிக்குவியலுக்கு நடுவே நின்று அழுவது விபரீத கற்பனைகளை எழுப்பி கலவரப்படுத்தும்.

அனு எழுந்து காபி மேக்கரில் காபி தயாரித்து அதை காபி மக்கில் ஊற்றி ஜன்னலுக்கருகில் சென்று திரையை நகர்த்தி விட்டு அமர்ந்து பருகியபடி 25ம் மாடியிலிருந்து பார்க்கும் போது தெருவெல்லாம் வெள்ளை போர்வை விரித்தமாதிரி இருந்தது. கடந்த நூறு ஆண்டுகளில் இப்படிப்பட்ட பனி பெய்ததில்லை என்கிறது வானிலை அறிக்கை. ஆனால் சுரங்க ரயிலில் சென்று வேலை பார்க்கும் அரங்கத்தை அடைய முடிகிறது. நடன ஒத்திகை நடத்த முடிகிறது. இன்று ஞாயிற்றுக் கிழமை என்றாலும் போக வேண்டும். பனிக்காலம் முடிந்ததும், டூர் ஆரம்பிக்கும். பிறகு சகலமும் மறந்து போகும்.

இன்று நளினிக்கும் டெலிபோன் செய்ய வேண்டும் என்று அவள் சோம்பலுடன் நினைத்துக் கொண்டாள். தனது மனக் கிளர்ச்சிகளை சூசனிடமும் ஜோனிடமும் காரலினிடமும் தெரிவிக் கும் நெருக்கத்துடன் நளினியிடம் ஏன் தெரிவிக்க முடிவதில்லை என்று அடிக்கடி ஏற்படும் வேதனை இப்பவும் ஏற்பட்டது. கலிஃபோர்னியாவில் பத்து வருஷங்களாக நளினி இருந்தாலும் அவள் அம்மாவுடைய உலகத்தின் பிரதிநிதி என்று தோன்றிற்று.

டெலிபோன் ஒலித்தது. நளினியாக இருக்குமோ என்ற எதிர்பார்ப்புடன் அதை எடுத்தபோது நளினியின் குரல் ஒலித்தது.

''ஹலோ அனு, ஊர்லே இருக்கலியா நீ?''

''ஊர்லேதான் இருந்தேன்க்கா. இப்பத்தான் உன்னைப் பத்தி நினைச்சேன்.''

''பொய்! பின்னே ஏன் போனே பண்ணலே? உனக்கு நா பண்ணும் போதெல்லாம் நீ வீட்டிலேயே இல்லையே - ஆன்ஸரிங் மெஷின் என்ன ஆச்சு?''

''அதைப் போடவே மறந்துடுவேன். நா தியேட்டர் வேலை யிலே ரொம்ப பிஸியா இருந்தேன்க்கா. வீட்டுக்கு தினமும்

காலையிலேதான் வருவேன். அப்புறம் தூங்கிடுவேன். டெலிபோன் அடிச்சாலும் காதிலே விழாது.''

''உடம்புக்கு ஒண்ணுமில்லையே?''

''இல்லே.''

''அம்மாகிட்டேந்து லெட்டர் வந்திருக்கு. பாட்டிக்கு உடம்பு சரியில்லையாம். பாட்டியைக் கவனிக்கறதும் தளிகை பண்றதும் முடியவேயில்லேன்னு எழுதியிருக்கா, பாவம். உங்கிட்டேந்து போனே வரலேன்னு எழுதியிருக்கா.''

''இன்னிக்குக் கண்டிப்பா பண்ணறேன்.''

''கலிஃபோர்னியாவுக்கு வாயேண்டி!''

''எங்கக்கா வரது? எனக்கு நேரமேயில்லை. டூர் வேற ஆரம்பிச்சுடும்.''

''போன் கூட பண்றதில்லே நீ.''

''பண்றேன் இனிமே.''

பின்னால் குழந்தையின் அழுகுரல் கேட்டது.

''என்ன, சீனு அழறானா?''

''ஆமாம், எழுந்துட்டான்.''

''அத்திம்பேர் எப்படியிருக்கார்?''

சீனுவின் அழுகையில் அவள் பதில் சொல்ல முடியாமல், ''அப்புறம் பேசலாம் அனு'' என்று போனை வைத்தாள். அனுவுக்கும் நளினிக்கும் பத்து வயது வித்தியாசம். அனுவுக்குப் பனிரெண்டு வயதாகும் போது அவளுடைய ஆதர்ச கதாநாயகியாக நளினி இருந்தவள். அப்போது அவர்கள் தில்லியில் இருந்தார்கள். நளினி

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தாள். பார்க்க வெடவெடவென்று ரொம்ப அழகாக இருப்பாள். மார்க்சிசம் பேசுவாள். வீட்டிற்கு வரும் அப்பாவின் முதலாளித்துவ நண்பர் களிடம் காரசாரமாக விவாதம் செய்வாள். அவள் பேசும்போது அனுவின் நெஞ்சு பெருமிதத்தில் விம்மும். நளினியின் மார்க்சிசம் அம்மாவைக் கலவரப்படுத்தவில்லை. ஆனால் அவள் ஒரு பஞ்சாபி பையனுடன் சுற்றுகிறாள் என்ற தகவல் நிலைகுலைய வைத்தது. அனுவுக்கு அப்போது எல்லாமே அரைகுறை ஊகம்தான். முழு விவரங்கள் தெரியாது. அம்மா ரொம்ப கெட்டிக்காரி. சத்தம் போட்டு வாக்குவாதம் செய்ய மாட்டாள். எல்லோரும் தூங்கினபிறகு நளினியிடம் அமர்ந்து இப்படிப்பட்ட ஆசாரமான வைஷ்ணவ குடும்பத்தில் பிறந்த ஒரு பெண், மார்க்சிசம் பேசுவது தவறில்லை. ஆனால் ஒரு பஞ்சாபியை மணம் செய்வது என்பது நடக்க முடியாத காரியம் என்று பல நாட்கள் பக்குவமாக உணர்த்தியதாக அனு பின்னால் தெரிந்து கொண்டாள். கதாநாயகி அக்கா, மடிசஞ்சி பாட்டிக்குப் பெப்பே காட்டி விட்டு ரஞ்சித் அகர்வாலைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாள், பஞ்சாபி அத்திம்பேர் குதிரையில் 'பராத்' வருவார் என்று அனு கண்ட கனவு ஒருநாள் சிதைந்தது. ஸ்ரீவில்லிபுத்தூரில் தூய வைஷ்ணவர்களுக்குப் பிறந்தவனும் அமெரிக்காவில் வேலை பார்க்கக் கிளம்பிக் கொண்டிருந்தவனுமான ஸ்ரீவேணுகோபாலனுக்கும் நளினிக்கும் கல்யாணம் என்று ஒருநாள் அவள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியதும் அம்மா சொன்னாள். பெரியவர்கள் பேச்சில் மூக்கை நுழைக்கக்கூடாது என்ற தீவிரக் கட்டுப்பாட்டை மறந்து,

''அக்கா சரின்னுட்டாளா?'' என்றாள்.

''சரிங்காம என்னடி?'' என்று அம்மா அதட்டினாள்.

அனுவுக்கு ஏமாற்றப்பட்டது போல் இருந்தது. நளினியின் அறையில் எட்டிப் பார்த்தபோது, நளினி குப்புறப்படுத்துக்கொண்டு

ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள். அழுதிருப்பாள் என்று தோன்றிற்று.

''அக்கா உனக்குக் கல்யாணமா?'' என்றாள் அனு துக்க சேதி கேட்பவன் போல.

''இதப் பார், உனக்கும் இதுக்கும் சம்பந்தமில்லே. உன் வேலையைப் பாத்துண்டு போ'' என்று நளினி சீறி விழுந்தபோது அனுவின் மனதில் இருந்த அவளுடைய கதாநாயகி ஸ்தானம் போயிற்று. கல்யாணமாகி இரண்டு மூன்று வருஷங்கள் நளினி குழப்பத்தில் தத்தளித்ததாக அவளுக்கு சந்தேகம். கடைசியில் எப்படி சமரசம் செய்து கொண்டாள் என்று இதுவரை புரியவில்லை. முன்பிருந்த பிரகாசம் இப்போது முகத்தில் இல்லை. மார்க்சிசத்தை அடுக்களை குக்கிங் ரேஞ்சுக்குள் முடக்கி விட்டாள் என்று தோன்றிற்று. கலிஃபோர்னியாவில், ஸ்ரீசூர்ணமும் ஜாதிக்கட்டுமாய் மணையில் புருஷனுடன் அமர்ந்து குழந்தைக்கு ஆயுஷோமம் செய்தாள். பிட்ஸ்பர்க் ரங்கநாதர் கோவிலுக்குச் சென்று முடி இறக்குகிறாள். அசப்பில் அம்மாவைப் போலப் பேசுகிறாள். அவளிடம் போய் இவளுடைய அனுபவங்களை எப்படிச் சொல் வது? 'ஒன்றேன் தோழி ஒன்றனானே' என்கிற சங்கப் பாடல் தெரியுமோ? நான் காதலிக்கிறவனைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன்னு தலைவி பாடற குறுந்தொகைப் பாடல் படிச்சிருக்கியா? ஜே.என்.யூ. புதர்களுக்குப் பின்னால் ரஞ்சித் அகர்வாலுடைய மடியில் படுத்தபடி சோஷலிஸக் கனவுகள் கண்டது நினைவிருக்கா என்ற கேள்விகள் கேட்பதே அவளது நிலையில் அநாகரிகமானவை என்று அனு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறாள். 'உனக்கு எப்போ கல்யாணம்' என்றோ, 'வரன் பார்க்கவா?' என்றோ அனுவிடம் யாரும் இப்போது கேட்பதில்லை, ''என்னைக் கேட்காமல் நீ யாரையாவது பாத்தே, நளினி செஞ்ச மாதிரி நான் கழுத்தை நீட்டுவேன்னு எதிர்பார்க்காதே'' என்று ஒருமுறை நளினியின் எதிரில் ஊரில் கத்தியதற்குப் பிறகு, யாரும் வாயைத்

திறப்பதில்லை. வாயைத் திறந்தால், 'இதோ இவன்தான் என் புருஷன்' என்று ஒரு வெள்ளையனையோ, கருப்பனையோ, முஸ்லிமையோ, கிறிஸ்தவனையோ அடையாளம் காட்டி விடுவாளோ என்று பயந்தவர்களைப் போல... என்னவோ படிக்கச் சென்று படிப்பு முடிந்ததும் நாட்டிய அரங்கத்தை ஆரம்பித்து வெள்ளைக்காரன் மத்தியில் கொடிகட்டிப் பறக்கிறாள் என்ற தெளிவில்லாத பெருமையில் கல் விழுந்து விடும் என்று தயங்குபவர்கள் போல.....

நேரமாகி விட்டது என்ற உணர்வில் அவள் அவசரமாக ஷவரில் குளித்து ஸாண்ட்விச்சைக் கொரித்தபடியே வெளியில் இருக்கும் பனிக்கு வேண்டிய கனமான உடுப்புகளை அணிந்து கொண்டு வெளியே சென்றாள். இன்று அவளுக்காகவே எல்லோரும் ஒத்திகைக்கு வருகிறார்கள் - எங்கெங்கோ பிறந்தவர்கள். என்னென்னவோ பாஷைகள் பேசுபவர்கள் - ஒத்திகை இல்லாவிட்டால் ஞாயிற்றுக்கிழமையின் தனிமை அவளுக்கு சோர்வைத் தரும் என்று. சுரங்க ரயிலின் கதகதப்பில் பயணித்து மீண்டும் பனி போர்த்திய தெருக்களைக் கடந்து அவள் அரங்கத்தை அடைந்தபோது அவர்கள் ஒத்திகையைத் துவங்கியிருந்தார்கள். அவளது கற்பனையில் உதித்த நடனம். தென்னிந்திய, அமெரிக்க நடன மரபுகளை இணைத்த பாலே நடனம். எல்லாரும் அவள் வந்ததைக் கூடக் கவனிக்காமல் அதில் ஒன்றியிருந்தார்கள். அவளும் அவனும் அவர்களும் தோழியும் பரத்தையும் பேசுவதை அனுபவித்துக் காட்டினார்கள். 2000 வருஷங்களுக்கு முன் பாடப் பெற்ற பாடல்களாக அவை தெரியவில்லை. நியூயார்க், மன்ஹாட்டன் தெருக்களில் நடக்கக்கூடிய விஷயமாகத் தோன்றிற்று.

''வில்லேன் காலன கழலே,

தொடியோள் மெல்லடி

மேலவும் சிலம்பே,

நல்லோர் யார் சொல்?''

என்று சாலை வழியாகச் செல்லும் காதலர்களை சந்தோஷத்தோடு பார்க்கும் சங்ககாலத்து ஊர் ஜனங்கள் மன்ஹாட்டனிலும் இருந்தார்கள். ஒரு நாள் அனுவுடன் படித்த சூசன்தான் அவளிடம் ராமானுஜனின் புத்தகத்தைக் கொண்டு வந்து காட்டினாள். ''எத்தனை அற்புதமான காதல் பாட்டுக்கள் பார்'' என்றாள். ''2000 வருஷத்துக்கு முன் நீ பேசும் மொழியில் எழுதப்பட்டதாம்'' என்று அதிசயித்தாள். ''ஆச்சரியமாக இருக்கிறது அனு. அப்பொழுத அமெரிக்கா பிறக்கவேயில்லை. எத்தனை நாகரிக முன்னோர்கள் உனக்கு!'' ஆங்கிலத்தைப் படித்த பிறகு தமிழ் மூலத்துக்கு ஆலாய்ப் பறந்தது நினைவில் இருக்கிறது. சூசனைப் போலவே அதிசயித்தது, பிறகு பரவசப்பட்டது, அதில் ஒன்றி அனுபவித்தது, மனித சரித்திரத்தின் எந்தக் கட்டத்தில் அந்த முன்னோர்கள் காணாமல் போனார்கள் என்று பரிதவித்தது, எல்லாம் கடைசியில் நாட்டியத்தில் வெளிப்பட்டது. பரவசப்பட்டதற்குக் காரணம் இருந்தது. காதல் வசப்பட்ட நாட்கள் அவை. ஒவ்வொரு கட்டத்திலும் அவளது மனநிலையை விளக்க ஒரு பாடல் அகப்பட்டது. 'அவனா, அவனையா நம்பறே?' என்று சூசன் ஒரு நாள் கேட்டபோது ரோஷத்துடன் அவள் சொன்ன பதிலை 2000 ஆண்டுகளுக்கு முன் ஒருத்தி சொல்லி இருந்தாள்:

நிலத்திலும் பெரிதே!

வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆர்அளவு இன்றே -

..... நாடனொடு நட்பே -

நிலம், வானம், நீர் எல்லாத்தையும் விடப் பெரியது எனது நட்பு என்று குறிஞ்சி மரங்கள் நிறைந்த மலை நாட்டுத் தலைவனுக்காக உடனே நாட்டியம் அமைத்து சூசனுக்கு ஆடிக் காண்பித்தது நினைவில் இருக்கிறது. ஆடுகையில் நிஜமாகக் கன்னங்கள் சிவந்தன. காதலனின் அணைப்பின் நினைவில் மார்பகங்கள் பூரித்தன.

'அபிநயிக்கும் போது ஒவ்வொரு வார்த்தையையும் நீயே உணர்ந்து அனுபவிக்கணும்' என்று அவளது டான்ஸ் டீச்சர் சென்னையில் சொன்னதற்கு இப்போதுதான் பரிமாணம் சேர்ந்தது. பல நிற தோழிகளுடைய உறவுகளும் உணர்வுகளும் ஏமாற்றங்களும் கோபங்களும் அவற்றில் சங்கமித்த காலிடோஸ்காப்பாகப் பாடல்கள் விரிந்தன. ஒத்திகை நடக்கும் இரவுகள் நீண்டு கொண்டே போகும்போது அவன் - சுனில் தாஸ் குப்தா - பொறுமையாகக் காத்திருப்பான் - அவளைப் போலவே இங்கே படிக்க வந்தவன் - கலைகளில் ஆர்வம் கொண்டவன் - அத்தனை ரசனை உள்ள ஒரு ஆணை அவள் அதுவரை சந்தித்ததில்லை. முதல் சந்திப்பிலேயே மனசு கழண்டது. சங்கப்பாடலைப் புரிந்து கொள்வதற்காகத் தமிழ் கற்கச் சித்தமானபோது அது, அவள் மீது அவன் கொண்ட காதலின் நிரூபணம் என்று தோன்றிற்று. சல்லாபம் மிகுந்த இரவுகளைப் பாதி அவனது தமிழ் உச்சரிப்பைக் கண்டு கிளம்பிய சிரிப்பொலி நிறைக்கும். கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்த போது அவன் இரண்டு மாதங்களுக்கு முன் இந்தியாவுக்குக் கிளம்பிச் சென்றான். அதற்குப் பிறகு அவனிட மிருந்து தகவலே இல்லை. இது பச்சைத் துரோகமா வேறு எதாவதா என்று எதுவும் விளங்கவில்லை. இந்தியாவில் அவன் தந்த விலாசங்களில் அவன் இல்லை.

அவனை மறந்துவிடு என்கிறார்கள் சூசனும் காரலினும். முடியவில்லை. அசட்டுத்தனமாக 'இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்' அவனை வரித்து விட்டது போல மனசு அடம் பிறக்கிறது. சங்க காலத்து நாயகியைப் போல அவனுக்குச் சென்ற இடத்தில் ஆபத்தோ என்று பரிதவிக்கிறது. 'நெஞ்சே, கிளம்பு - அவன் விளங்காத மொழி பேசும் தேசத்தில் இருந்தாலும், கண்டுபிடிப்போம் ' என்று பதைக்கிறது. இதில் 'ஏண்டி போன் செய்யலே' என்ற அம்மாவின் கேள்வி நைந்து போகிறது. அம்மாவிடம் இதையெல்லாம் சொல்ல முடியாது.

''ஹாய் அனு!' என்று தோழிகள் அருகில் வந்து நின்றார்கள். ஆளுக்கு இதமாகக் கன்னத்தில் முத்தமிட்டார்கள். மீண்டும் துவங்கியது ஒத்திகை. காதலும் நாணமும் காமமும் புணர்வும், தவிப்பும் கோபமும் பிணைப்பும் காலத்தின் எல்லைகளைக் கடந்து உணர்வுகளில் சங்கமித்தன. களைப்பும் திருப்தியுமாக எல்லோரும் கலையும்போது சூசன் கூடவே வந்தாள்.

''உன் வீடு வரை வரப்போகிறேன்'' என்றாள். ''இன்றிரவு உன்னோடு தங்கப் போகிறேன்.''

''ஓ, கிரேட்!'' என்று சந்தோஷத்துடன் அனு சிரித்தாள். ''இன்றைக்கு என் அம்மாவோடு இரவு பேச வேண்டும், ஞாபகப் படுத்து.'' சுரங்க ரயிலில் பயணித்து பிறகு நடுக்கும் குளிரைக் கடந்து வீடு வந்து சேரும் வரை இருவரும் எதுவும் பேசவில்லை. பனி உறைகளைக் களைந்து கணப்படுப்பின் எதிரில் சற்று காலை நீட்டிய பிறகு அனு சூடாகக் காபியைக் கலந்து கொண்டு வந்தாள்.

சூசன் என்னவோ சொல்லத் தவிக்கிறாள் என்று தோன்றிற்று.

''என்ன சூசன்?'' என்றாள் அனு சந்தேகத்துடன்.

''அந்த சுனில் தாஸ் குப்தாவை நீ மறந்துடணும்'' என்றாள் சூசன் லேசான கோபத்துடன். ''அவன் ஒரு ஏமாத்துக்காரன்.''

அனுவுக்கு ரத்தம் சுண்டிற்று.

''எப்படிச் சொல்கிறாய்?''

''அவன் நியூயார்க்கில்தான் இருக்கிறான். இந்தியாவிலிருந்து திரும்பி வந்து ஒரு மாசமாகிறது.''

''நான் நம்ப மாட்டேன்.''

அடிபட்ட பட்சி போல் குரல் விரிசல் கண்டது. ''அதுதான் உண்மை அனு'' என்றாள் சூசன் அனுபதாபத்துடன், ''வேறு ஒருத்தியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஜாக்ஸன் ஹைட்ஸில்.''

''யாரு?''

''அது முக்கியமா?''

''ஆமாம்.''

''இந்தியாவிலே கல்யாணம் செய்து கொண்டு வந்திருக்கிறான். அவன் மொழி பேசும் பெண்ணை. வங்காளத்துப் பெண்ணை. உனக்காகத் தமிழ் கற்றுக் கொண்டானே போக்கிரி.''

அனு சற்று நேரம் அதிர்ந்த நிலையில் இருந்தாள். நம்ப முடியவில்லை. சுனிலின் உஷ்ணமான மூச்சுக் காற்றை இப்பவும் தேகமெங்கும் உணர முடிந்தது. சூசன் அவளருகில் வந்து நின்று அவளுடைய தோளை அணைத்தாள்.

''அவனைக் கட்டி வைத்து உதைக்க வேண்டும் போல் இருக்கிறது.''

ரஞ்சித் அகர்வால் நளினியைப் பற்றி அப்படித்தான் சொல்லியிருப்பான் என்று திடீரென்று அனுவுக்குத் தோன்றிற்று.

''சங்கம் கவிதையில் மனசைப் பறிகொடுத்தவன் போல் நடித்தானே!''

அனுவுக்குப் இப்பொழுது சிரிப்பு வந்தது. ''நீ சொல்வது சரிதான். அதை அவன் கவிதையாகப் பார்த்தான். வாழ்வாகப் பார்க்வில்லை. அதற்கும் ஒரு பக்குவம் வேண்டும் சூசன்.''

சூசனின் முகத்தில் இன்னும் கோபம் தெரிந்தது. அவளைத் தான் இப்போது சமாதானப்படுத்த வேண்டும் போல் இருந்தது. கடந்த 2000 வருஷங்களில் அது எங்கோ காணாமற் போய் விட்டது என்பதன் சமூகவியல் காரணங்களை இவளுக்கு விளக்க வேண்டும்.

எங்கேயோ ஒரு சர்ச்சிலிருந்து மணியடித்தது. அம்மாவுக்கு டெலிபோன் செய்ய வேண்டும் என்று ஞாபகம் வந்தது. நிதானமாக சென்னை எண்ணைச் சுழற்றியதும் மணி ஒலிக்க அம்மாவின் குரல் கேட்டது. ''ஹலோ?''

''அம்மா, அனு பேசறேன். உன் லெட்டர் கிடைச்சுது. பாட்டி எப்படிம்மா இருக்கா?''

''சொல்லி வெச்ச மாதிரி போன் பண்றியேடி. இன்னிக்கு விடிகாலமே அவ ஆயுசு முடிஞ்சுது. கடைசி வரைக்கும் தன் ஆசாரத்தை விடாமெ ஒப்பேத்திண்டா - புண்யவதி.''

சூசன் ஓசைப்படுத்தாமல் வெளியேறுவதை அவள் கவனித்தாள். ஜன்னல் திரையை விலக்கி வெளியே பார்த்த போது இருளில் நியூயார்க் நகரம் ஜகஜ்ஜோதியாய் தெரிந்தது. அம்மா வேறு யுகத்திலிருந்து பேசுவது போல் இருந்தது.

இந்தியாடுடே பெண்கள் மலர் 1996